**செய்தி வெளியீடு எண்:759** **நாள்: 10.11.2017**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 8.11.2017 அன்று தலைமைச் செயலகத்தில், வேளாண்மைத் துறை சார்பில் திருவள்ளூர் மாவட்டம், செங்குன்றத்தில் 1 கோடியே 87 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 2000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட மதில்சுவருடன் கூடிய சேமிப்புக் கிடங்கினை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், 15 கோடியே 90 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 6 ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையக் கட்டடங்கள், 2 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், சேமிப்புக் கிடங்கு, மஞ்சள் பதப்படுத்தும் மையம், பரிவர்த்தனை கூடம், மாவட்ட தோட்டக்கலை தொழில்நுட்ப ஆதார மையம் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

கிராமப்புற மக்களின் வாழ்வுக்கு ஆதாரமாக விளங்குகின்ற வேளாண் தொழிலை மேம்படுத்திடவும், வேளாண் உற்பத்தி திறனில் உள்ள இடைவெளியை உரிய பண்ணை அணுகுமுறை மூலம் குறைத்து உணவுப் பயிர்கள் உற்பத்தியை பெருக்குவதற்கும், வேளாண் விளைபொருட்களின் அறுவடைக்குப்பிந்தைய பதப்படுத்தும் கட்டமைப்புகளை மேம்படுத்திடவும், சந்தையிணைப்பை வேறுபடுத்துவதன் மூலம் விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்க செய்து அவர்களின் வருமானத்தை பலமடங்காக உயர்த்திடவும், தமிழகத்தில் இரண்டாம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்திடவும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், திருவள்ளூர் மாவட்டம், செங்குன்றத்தில் 1 கோடியே 87 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 2000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட மதில்சுவருடன் கூடிய சேமிப்புக் கிடங்கினை காணொலிக் காட்சி மூலமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள். இந்த சேமிப்பு கிடங்கு, விவசாயிகள் வேளாண் விளைபொருட்களை மழை, வெயில், ஈரப்பதம் மற்றும் இதர இயற்கை இடர்பாடுகளிலிருந்து பாதுகாத்து விஞ்ஞான முறைப்படி சேமிப்பதற்கு ஏதுவாக கட்டப்பட்டுள்ளது.

மேலும், நாகப்பட்டினம் மாவட்டம் – செம்பனார்கோயில், பெரம்பலூர் மாவட்டம் – பெரம்பலூர், திருவண்ணாமலை மாவட்டம் – புதுப்பாளையம் மற்றும் துரிஞ்சாபுரம், விழுப்புரம் மாவட்டம் – வானூர் மற்றும் மரக்காணம் ஆகிய இடங்களில் 9 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 6 ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையக் கட்டடங்கள்;

நபார்டு வங்கியின் "கிடங்கு உட்கட்டமைப்பு நிதி"–யின் கீழ் ஈரோடு மாவட்டம் – மயிலம்பாடியில் 1 கோடியே 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 2000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட அலுவலகக் கட்டடத்துடன் கூடிய சேமிப்பு கிடங்கு;

விழுப்புரம் மாவட்டம் – மணலூர்பேட்டையில் 1 கோடியே 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்; திருவாரூர் மாவட்டம் – வலங்கைமானில் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடம்; திருவண்ணாமலை மாவட்டம் – அம்மாபாளையத்தில் 1 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மஞ்சள் பதப்படுத்தும் மையம்; ஈரோடு மாவட்டம் – வில்லரசம்பட்டியில் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அலுவலகக் கட்டடத்துடன் கூடிய பரிவர்த்தனைக்கூடம்; திருவண்ணாமலை மாவட்டம் – திருவண்ணாமலையில் 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாவட்ட தோட்டக்கலை தொழில்நுட்ப ஆதார மையம்;

என மொத்தம் 17 கோடியே 77 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வேளாண்மைத் துறை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில் புறநகர் வீட்டு காய்கறி உற்பத்தி பெருக்கு திட்டத்தின் கீழ், கத்தரி, தக்காளி, புடலங்காய், பாகற்காய், பீர்க்கன்காய், மிளகாய், கொத்தவரங்காய், மற்றும் கீரைவகைகள் ஆகிய காய்கறிகளில் ஏதேனும் 5 காய்கறி விதைகள் அடங்கிய 6,25,000 பாக்கெட்டுகளை வழங்கும் திட்டத்தினை துவக்கி வைக்கும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 5 பயனாளிகளுக்கு காய்கறி விதைகள் அடங்கிய பாக்கெட்டுகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு.இரா. துரைக்கண்ணு, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு.பி. பெஞ்சமின், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத்துறை அமைச்சர் திரு.க. பாண்டியராஜன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., வேளாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை ஆணையர் திரு.சு.ஜ. சிரு, இ.ஆ.ப, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் திருமதி அர்ச்சனா பட்நாயக், இ.ஆ.ப., வேளாண்மைத் துறை இயக்குநர் திரு.வ. தட்சிணாமூர்த்தி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**